**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 12.11.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **11.11.2020** இராசிபுரம் நகராட்சி

**பொருள்கள்**

(1) இந்நகராட்சி குடிநீர் நிதியின்கீழ் பல்வேறு பணிகளுக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர் கலந்து கொண்டு பணிகள் கிடைக்கப் பெறாததால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க கோரியுள்ளார்.

எனவே, அன்னார் பெயரில் 2017–18–ஆம் ஆண்டில் ரூ. 19520/– காலங்கடந்த வைப்புத் தொகையில் உள்ளதால் மேற்கண்ட தொகையினை திரு ஜே. ரவிச்சந்திரன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(1765/20/பி2)

**தீர்மானம் எண். 895**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டம்பர் பின் லாரி TN 28 AT 8969 தகுதிச் சான்று மற்றும் பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு கடந்த 16.10.2020 அன்று இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின் வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | ஸ்ரீ ஜோதிமுருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம். (ரூ.) | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர். (ரூ.) |
|---|---|---|---|
| 1 | வர்ணம் பூசுதல் | 13000/– | 12600/– |
| 2 | ஸ்டிக்கர் ஒட்டுதல் | 4500/– | 4000/– |
| 3 | ஆயில் சர்வீஸ் செய்தல் | 500/– | 400/– |
| 4 | ஆயில் பில்டர் & டீசல் பில்டர் மாற்றுதல் | 1500/– | 1100/– |
| 5 | 4 வீல் பிரேக் லைனிங் புதியது மாற்றுதல் | 6000/– | 5100/– |
| 6 | 4 வீல் கிரீஸ் மாற்றுதல் | 7000/– | 6600/– |
| 7 | 4 வீல் பேரிங் செக்கப் செய்து மாற்றுதல் | 7000/– | 6200/– |
| 8 | 4 வீல் போல்டு நட்டு புதியது மாற்றுதல் | 6000/– | 5100/– |
| 9 | ஏர் பில்டர் புதியது மாற்றுதல் | 20000/– | 19260/– |
| 10 | 4 சைடு ஸ்பிரிங் கட்டு அடித்து பூஸ் மாற்றுதல் | 20000/– | 19500/– |
| 11 | எலக்ட்ரிக்கல் செக்கப் செய்தல் டேஞ்சர் லைட் மாற்றுதல் | 3000/– | 2500/– |
| 12 | கிளட்ச் பிளேட் மற்றும் கவர் அசெம்பளி மாற்றுதல் | 30000/– | 29500/– |
| 13 | சிறு சிறு டிங்கர் வேலை செய்தல் மற்றும் சிறு சிறு பழுதுகள் சரி செய்தல் | 24000/– | 23665/– |
| 14 | ஸ்பீடு கவர்னர் புதுப்பிக்கவும் | 5000/– | 4440/– |

வ.எண். 2–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3307/20/எச்1)

**தீர்மானம் எண். 896**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள ஆழ்துளைக் கிணற்றிலுள்ள சிறு மின்விசைப் பம்பு மற்றும் திறந்தவெளிக் கிணற்றிலுள்ள நீர் முழ்கி மோட்டார்கள் சரி செய்யும் பணிக்கு 2020–21–ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ. 800000/– மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிக் கோர மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) ஒப்பந்தப்புள்ளிக் கோர மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4470/20/இ2)

**தீர்மானம் எண். 897**

அனுமதிக்கப்பட்டது.

(4) இந்நகராட்சிப் பணியாளர்களின் சேமநலநிதி சந்தாத் தொகைக்கு 2016–17 முதல் 2019–20 முடிய வட்டித் தொகை கணக்கீடு செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்ப தணிக்கையாளர்களிடம் விலைப்புள்ளி பெற்று மேற்காணும் பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ. 100000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்காணும் பணியாளர்களின் நலன் கருதி உடனடியாக செய்து முடிக்க வேண்டியிருப்பதால் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் ஏற்கலாம்.

(3893/20/பி2)

**தீர்மானம் எண். 898**

அனுமதிக்கப்பட்டது.

(5) இந்நகராட்சிப் பணியாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் சேமநலநிதி சந்தாத் தொகைக்கு 2016–17 முதல் 2019–20 முடிய வட்டி கணக்கீடு செய்து வழங்கும் பணிக்கு 23.10.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு கே. பிரபாகரன், Sanjay Solutions, குமாரபாளையம் | ரூ. 95000/– |
| 2 | திரு வி. சதீஸ்குமார், Ram Solutions, திருவான்மியூர், சென்னை | ரூ. 97000/– |
| 3 | O Zone Technologies, லேக் வியூரோடு, சென்னை | ரூ. 96000/– |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு கே. பிரபாகரன், Sanjay Solutions, குமாரபாளையம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(3893/20/பி2)

**தீர்மானம் எண். 899**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் இராசிபுரம் நகராட்சியில் 100 சதவீதம் திறந்தவெளியில் மலம் கழித்தல் open defecation free + இல்லாத நகராட்சியாக பிரகடனப்படுத்த இராசிபுரம் நகராட்சியிலுள்ள மொத்த 27 வார்டுகளிலும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக open defecation free + தூய்மையான பகுதியாக ''இராசிபுரம் நகராட்சியை''பிரகடனப்படுத்த இந்நகர பொது மக்களிடமிருந்து கருத்து மற்றும் ஆட்சேபனைகள் கேட்கும் பொருட்டு, இரு தினசரி நாளிதழ்களில் விளம்பரப்படுத்தவும், அதற்கான கட்டணத்தை செலுத்தவும், தேவையான படிவங்களை உள்ளூர் அச்சகத்தில் அச்சடித்துக் கொள்ளவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியங்கருதி, நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கவும், தொகையை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
இ) மேற்காணும் செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து (SUC) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1816/20/எச்1)

**தீர்மானம் எண். 900**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியான தட்டான்குட்டை ரோட்டிலுள்ள நகராட்சி உரக்கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை செயின்டோசர் மூலம் சமன் செய்ய ஒரு மணி நேரத்திற்கு ரூ. 840/– வீதம் மொத்தம் 120 மணி நேரத்திற்கு வாடகை கட்டணம் உத்தேச செலவினம் ரூ. 100800/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் துறை செயின்டோசர் மூலம் இப்பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) மேற்காணும் செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதி(SUC)யிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3212/13/எச்1)

**தீர்மானம் எண். 901**

அனுமதிக்கப்பட்டது.

( 8 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நடைபெறும் கொரோனா வைரஸ் (கோவிட்–19) நோய் தடுப்பு பணிக்கு நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளிச்சிங் பவுடர், 3 லேயர் மாஸ்க், சேனிடைசர் ஆகியவை இருப்பில் இல்லாத காரணத்தினால், மேற்காண் கிருமிநாசினிகள் மற்றும் முககவசம் தேவையான அளவில் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4551/20/எச்1)

**தீர்மானம் எண். 902**

அனுமதிக்கப்பட்டது.

( 9 ) இராசிபுரம் நகராட்சி வி. நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்திலுள்ள கிணற்றின் பக்கவாட்டு சுவர்கள் இடிந்துவிழும் நிலையில் உள்ளதால், மரங்களை அகற்றி சுவர்களை புதுப்பிக்கவும், பாதுகாப்பு கம்பி வலைகளுக்கு வர்ணம் பூசவும் ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 85000/– மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 85000/– மதிப்பீட்டு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(இ1/4482/2020)

**தீர்மானம் எண். 903**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் விவரங்கள் கீழ்கண்டுள்ளவாறு நாளேடுகளின் தொழில் மலரில் வெளியிடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. தினமணி – Express publications (Madurai) Private Limited | - | ரூ. 20000/– |
| 2. தினத்தந்தி – The Daily Thanthi | - | ரூ. 17325/– |
| 3. தினகரன் – KAL Publications Private Limited | - | ரூ. 8836/– |

மேற்காணும் விளம்பரக் கட்டணங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

(2670/20/இ1)

**தீர்மானம் எண். 904**

அனுமதிக்கப்பட்டது.

(11) நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்கெட் கடை எண். 27–ஐ திரு பி. சிவராஜ் என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். தற்போது கடையினை 30.09.2020 முடிய வாடகை மற்றும் ஜி,எஸ்.டி. நிலுவையின்றி செலுத்தி நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துள்ளார். வருவாய் ஆய்வாளர் குறிப்பின்படி தினசரி மார்கெட் கடை எண். 27–ற்கு கேட்பு நிறுத்தம் செய்யவும் பொது ஏல நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3748/20/அ2)

**தீர்மானம் எண். 905**

அனுமதிக்கப்பட்டது.

(12) அம்மா உணவகத்தில் வழங்கப்படும் மலிவு விலை உணவுகளுக்கு கட்டணமாக வசூலிக்க ரசீதுகள் கீழ்வருமாறு.

| | | |
|---|---|---|
| இட்லி 1.00 ரூ. மதிப்பு | – | 500000 (500 புக்) |
| சாம்பார் சாதம் 5.00 ரூ. மதிப்பு | – | 50000 (50 புக்) |
| தயிர் சாதம் 3.00 ரூ. மதிப்பு | – | 50000 (50 புக்) |

மேற்காணும் பட்டியல்படி ரசீதுகள் அச்சடித்து வழங்க ஆகும் உத்தேச செலவு தொகை ரூ. 120000/–க்கும், நிதித்துறை அரசாணை எண். 283 நாள் 18.06.1998–இல் தெரிவித்துள்ளவாறு, ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட், இந்த சங்கத்தில் அரசு துறைகளும் மற்றும் அரசை சார்ந்த முறை நிறுவனங்களும் விலைப்புள்ளிக் கோராமல் நேரடியாக கொள்முதல் செய்ய மேற்படி அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையின்படி ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3193/20/பி3)

**தீர்மானம் எண். 906**

அனுமதிக்கப்பட்டது.

(13) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் (கோவிட் – 19) நோய் நகர பொது மக்களுக்கு பரவாமல் தடுக்கும் பணிக்காக கிருமிநாசினி மருந்து ECO Clean – 50 plus – DC என்ற மருந்தினை விநியோகம் செய்யும் பணிக்கு கடந்த 28.09.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின் வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு லிட்டரின் விலை |
|---|---|---|
| 1) | Classis Plast, Coimbatore | ரூ. 4800 + 18% GST |
| 2) | Sathyam Agencies, Erode | ரூ. 5150 + 18% GST |
| 3) | Shri Vari Traders, Erode | ரூ. 5050 + 18% GST |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், M/s. Classis Plast, Coimbatore என்ற நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியங்கருதியும், பொது சுகாதார நலன் கருதியும், நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், கோவிட் – 19 (SDRF) நிதி கிடைக்கப் பெறின், அந்நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3779/20/எச்1)

**தீர்மானம் எண். 907**

அனுமதிக்கப்பட்டது.

(14) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட் – 19) நோய் கீழ்காணும் தெருவில் அதிகமாக பரவி வருவதால், அப்பகுதிகளில் தகர அட்டைக் கொண்டு அடைத்து மூங்கில், சவுக்கு கட்டைகள் கொண்டு கட்டும் பணிக்கு மூன்று விலைப்புள்ளிகள் கடந்த 25.09.2020 அன்று பெறப்பட்டது.

**தெருக்களின் விவரம்**

1) வார்டு எண். 5 – ஜாத்தான் திருமலை தெரு, முத்துசாமி தெரு, சாவடி சந்து மற்றும் தியாகராஜசாமி கோவில் தெரு
2) வார்டு எண். 1 – சிவன் கோவில் தெரு
3) வார்டு எண். 9 – வி. நகர் முதல் தெரு
4) வார்டு எண். 6 – எல்லப்பா தெரு
5) வார்டு எண். 18– கணபதிவிலாஸ் ரைஸ் மில் தெரு

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒரு தகர அட்டை தடுப்பு அமைக்க கட்டணம் |
|---|---|---|
| 1 | திரு ஆர். எ. பரமேஸ்வரன், த/பெ. சி. இராமசாமி, 11/6, மில் சந்து, வடக்கு காலனி, இராசிபுரம் | ரூ. 5500/– |
| 2 | திரு இரா. இராஜேந்திரன், த/பெ. ராமன், 25, மேட்டுத்தெரு, இராசிபுரம் | ரூ. 5650/– |
| 3 | திரு ஆர். கருணாகரன், த/பெ. இராமசாமி, பாச்சி தெரு, இராசிபுரம் | ரூ. 5750/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால் அதன் ஒப்பந்ததாரரான திரு ஆர்.எ. பரமேஸ்வரன் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியத்தைக் கருதி, நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

(868/20/எச்1)

**தீர்மானம் எண். 908**

அனுமதிக்கப்பட்டது.

( 15 ) இராசிபுரம் நகராட்சியில் வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பதற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண். 170 நாள் 27.10.2020–இல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, இந்நகராட்சியில் BPL கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ளுதல், கணக்கெடுப்பு படிவங்களை அச்சடித்தல், கணக்கெடுப்பு படிவங்களை கள ஆய்வு மேற்கொள்ளுதல், மேற்படி கூடுதல் விவர படிவங்களை கணினியில் பதிவேற்றம் செய்தல், அதற்கு தேவையான அதிவேக பைப்பர் பிராட்பேண்ட் இணைப்பு பெறுதல், எழுது பொருட்கள் வாங்குதல் மற்றும் இது தொடர்பான இதர செலவினங்களுக்கு ரூ. 70000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

(251/19/எச்1)

**தீர்மானம் எண். 909**

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 Q 8402–இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய உத்தேச செலவினம் ரூ. 90000/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளிக் கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3328/20/இ2)

**தீர்மானம் எண். 910**

அனுமதிக்கப்பட்டது.

ஓம்/– ஆ.குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்( கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி.